DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No. | : | CC. 182/2018 | Taluk | : | சிவகங்கை |
| Deposition of Witness for | : | PW 4 | Caste | : | |
| Name | : | பழனி (எ) பழனிக்குமார் | Calling | : | |
| Father / Husband Name | : | ராமன் | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 16th April 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) எனக்கு சொந்தஊர் சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா இண்டங்குளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தற்சமயம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், காளையார்கோவில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் சிவகங்கை ரோஸ் நகரில் உள்ள தமிழ்நாடு வாணிபக் கழக விற்பனையாளராக (டாஸ்மாக்) பணிபுரிந்த சமயம் 04.06.2018 ம் தேதியன்று நானும் மற்றொரு விற்பனையாளரான அ.சா.1 ஜெயபால் என்பவரும் அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் கடையை அடைத்துவிட்டு அன்று விற்பனையான பணம் ரூபாய் 60 ஆயிரத்தை சரிபார்த்து அ.சா.1 ஜெயபால் எடுத்துக்கொண்டு ஜெயபால் ஒரு இரு சக்கர வாகனத்திலும் நான் ஒரு இரு சக்கர வாகனத்திலும் வந்து கொண்டிருந்தபோது இரவு சுமார் 10.20 மணியளவில் சிவகங்கை MPTC செட் ரயில்வே மேம்பாலத்தில் சென்று

Web Copy

கொண்டிருந்தபோது, ஜெயபால் எனக்கு முன்னாள் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

2) அப்போது, 3 நபர்கள் சிறிய இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் ஜெயபாலை மறித்து முகத்தில் ஏதோ தூவி ஜெயபாலை நிறுத்தியபோது நான் பின்னாளிலிருந்து சத்தம்போட்டுக்கொண்டே என்னுடைய இரு சக்கர வாகனத்தின் அருகே வந்தவுடன் அவர்கள் மூவரும் அவர்கள் வந்த அதே இரு சக்கர வாகனத்தில் ஓடிவிட்டார்கள். அந்த சமயத்தில் எங்களுடன் பணிபுரிந்த பாண்டி, நாகராஜன் ஆகியோரும் அங்கு வந்துவிட்டார்கள். ஜெயபாலிடம் என்ன நடந்தது எனக் கேட்டபோது முகத்தில் எதோ பொடியைத் தூவிவிட்டு அவர் வைத்திருந்த பணத்தை பறிக்கும் நோக்கில் அவர்கள் செயல்பட்டதாகச் சொன்னார். அந்த 3 நபர்களுக்கும் சுமார் 23 வயது தான் இருக்கும்.

3) ஜெயபாலை நாகராஜன், பாண்டியும் மருத்துவமனை அழைத்துச் சென்றார்கள். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு காவல் நிலையத்தில் ஜெயபால் புகார் கொடுத்த விவரம் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை இது சம்பந்தமாக சுமார் ஒரு வாரம் கழித்து விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) இவ்வழக்கு சாட்சிகள் பாண்டி, நாகராஜன் ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு அரை மணி நேரம் கழித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து சம்பவ இடம் சென்றேன் என்றால் நான் 30 அடி தூரத்தில் அ.சா.1 க்கு பின்னால் சென்றுகொண்டிருந்தேன். சம்பவ இடத்தில் மின் விளக்குகள் வெளிச்சம் இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடம் ஆள்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான் நான் செல்லும்போது அங்கு ஆள் நடமாட்டம் இல்லை. ஜெயபால் அ.சா.1 எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் புகார் கொடுத்த தேதி எனக்கு ஞாபகமில்லை. என்னை இந்த வழக்கு

Webcopy

சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

2) சம்பவம் நடந்த பின் நான் நேரடியாக எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும் ஜெயபாலுடன் மருத்துவமனை செல்லவில்லை என்றாலும் எதிரிகள் யார் என்று எனக்குத் தெரியாது என்றாலும் சரிதான். எதிரிகள் ஓட்டியதாக நான் சொல்லும் சிறிய இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் என்னுடன் பணிபுரிபவர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் போலீசார் சொல்லிக்கொடுத்தற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 16.04.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy